**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகு– திருமதி.ச.வித்யாஸ்ரீ, த/பெ, காலஞ்சென்ற திரு.எஸ்.சந்திரசேகரன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டது– பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பணிகள் அலகு, பணி–9(1) பிரிவு**

அரசாணை (3டி) எண்.122

நாள் 06.07.2023

சோபகிருது வருடம், ஆனி–21,
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ–1) துறை, நாள் 23.01.2020.
2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ஆ.கு.4/6481/2020, நாள் 03.10.2022.

******

**ஆணை:–**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகில், வட்டாட்சியராகப் பணிபுரிந்து பணியிடையே 25.08.2014 அன்று காலஞ்சென்ற திரு.எஸ்.சந்திரசேகரன் என்பவரது மனைவி திருமதி.ஜான்சிராணி என்பவர் தனது மகள் திருமதி.ச.வித்யாஸ்ரீ என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 12.01.2016 அன்று மனு அளித்துள்ளார் என்றும், தனியர் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 02.12.2016 அன்று மனு அளித்துள்ளார் என்றும், இம்மனுக்கள் மூன்றாண்டு காலக்கெடுவிற்குள் பெறப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது என்றும், காலஞ்சென்ற திரு.எஸ்.சந்திரசேகரன் என்பவர் இறந்த (25.08.2014) தேதியில் திருமதி.ச.வித்யாஸ்ரீ என்பவர் 24 வயது நிரம்பப் பெற்றுள்ளார் என்றும், மனு அளிக்கப்பட்ட (12.01.2016) தேதியில் 26 வயதினை பூர்த்தி செய்துள்ளதோடு, உரிய கல்வித்தகுதியான 10–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் (மார்ச்–2005) என்றும், தனியர், திருமதி.ச.வித்யாஸ்ரீ என்பவருக்கு உரிய கல்வி, வயது மற்றும் வறியநிலைத் தகுதிகளின் அடிப்படையிலேயே இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது என்ற திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையினை ஏற்று, தனியர் திருமணமான மகள் என்பதால்

//த.பி.பா//

அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ-1) துறை, நாள்.23.01.2020-ன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15 மற்றும் பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பலன்கள் பெற பிரிவு 28(2) ஆகியவற்றை தளர்வு செய்து, தனியர் பணியில் சேர்ந்த நாளான 19.07.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசாணையினைப் பெற்றுத் தருமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை அரசளவில் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகில், வட்டாட்சியராகப் பணிபுரிந்து பணியிடையே 25.08.2014 அன்று காலஞ்சென்ற திரு.எஸ்.சந்திரசேகரன் என்பவரின் மகள் திருமதி.ச.வித்யாஸ்ரீ என்பவர் திருமணமான பெண் வாரிசுதாரர் என்பதால், தனியர் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 58-இன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 15 மற்றும் பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பலன்கள் பெற தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 28(2) ஆகியவற்றை தளர்வு செய்து தனியர் திருமதி.ச.வித்யாஸ்ரீ என்பவர் பணியேற்ற நாளான 19.07.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.3728/க்யூ.2/2023-1, நாள்.29.05.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.4849569/ஜி.2/2023, நாள்.21.06.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**குமார் ஜயந்த்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-05.
மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம்.
திருமதி.ச.வித்யாஸ்ரீ, இளநிலை உதவியாளர்.
(திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் மூலமாக)

**நகல்**
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

ந.க: 982/2016/அ1, நாள்: .7.2023.
அனுப்பப்படுகிறது.

21/7/23.

Personal Assistant (G) to
Collector Tiruvallur

6/7/2023
பிரிவு அலுவலர்.

பெறுநர்:
திருமதி. ச. வித்யாஸ்ரீ
இளநிலை உதவியாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பூந்தமல்லி வட்டம்.